# மோசடிகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.

**விழிப்புடன் இருங்கள். உங்களைக் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.**




## myTax இணையவாசல்மூலம் பாதுகாப்பாகப் பரிவர்த்தனை செய்யுங்கள்

**https://mytax.iras.gov.sg**

பொதுவான இந்த **4** மோசடிகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்

**1.**




### வரி திரும்பக் கொடுப்பது தொடர்பிலான மோசடி

வரி திரும்பக் கொடுக்கப்படுவதாக உங்களுக்கு மின்னஞ்சல் ஏதேனும் கிடைக்கப்பெற்றால், எச்சரிக்கையாக இருங்கள். மோசடி இணைப்புகளைச் சொடுக்க வேண்டாம்.

திரும்பக் கொடுக்கப்படவேண்டிய வரித்தொகை ஏதேனும் இருந்தால், அவை தானாகவே வரிசெலுத்துவோரின் PayNow (NRIC/FIN/UEN) அல்லது சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையத்துடன் பதிந்துகொள்ளப்பட்ட வங்கிக் கணக்கில் போடப்படும்.

**2.**




### முதலீட்டு மோசடி

உங்கள் முதலீட்டு லாபத்தின் பொருட்டு, மூலதன ஆதாய வரி, வருமான வரி, அல்லது பொருள், சேவை வரி செலுத்தும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டால், எச்சரிக்கையாக இருங்கள் எந்தப் பணமும் செலுத்தாதீர்!

சிங்கப்பூரில் விற்கப்படும் முதலீடுகள், பங்குகள் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் லாபம் தொடர்பில் எவ்வித மூலதன ஆதாய வரியும் விதிக்கப்பட மாட்டா.

**3.**



### தகவல்களைத் திருடவல்ல மின்னஞ்சல் மோசடி

சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையத்தை ஒத்த அடையாளத்தைக் கொண்டு அனுப்பப்படும் தகவல்களைத் திருடவல்ல மின்னஞ்சல்கள், கடிதங்கள் ஆகியவை குறித்து எச்சரிக்கையாக இருங்கள். அவற்றிடம் ஏமாந்துவிடாதீர்கள்!

தகவல் மாற்றங்கள், பரிவர்த்தனைகள் ஆகியவை myTax இணையவாசல்வழி மட்டுமே மேற்கொள்ளப்பட்டலாம்.

**4.**



### போலி முத்திரைச் சான்றிதழ் மோசடி

உங்கள் வீட்டு வாடகையை உறுதிப்படுத்திக்கொள்ள, முத்திரை வரி அல்லது கூடுதல் முத்திரை வரிக்கான கோரிக்கைகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்! அவற்றிடம் ஏமாந்துவிடாதீர்கள்!

மூன்றாம் தரப்பினரால் (வழக்கறிஞர் அல்லது சொத்து முகவர்) உங்களுக்கு அளிக்கப்பட்ட முத்திரைச் சான்றிதழின் உண்மைத்தன்மையைச் சரிபார்க்க, மின்-முத்திரையிடுதல் (e-Stamping) இணையவாசலுக்குச் செல்லுங்கள்.

சொத்து முகவை மன்றத்தின் இணையப்பக்கம்வழி (https://www.cea.gov.sg/aceas/public-register/sales/1), உங்களுடைய முகவர் அந்த மன்றத்தில் உறுப்பினராகப் பதிந்துகொண்டவரா என்பதைச் சரிபாருங்கள். அவருடைய கைபேசி எண் சரியானதா என்பதையும் உறுதிப்படுத்திகொள்ளுங்கள்.

மோசடிகள், தகவல் திருட்டு ஆகியவை குறித்து புகார் அளிக்க, திங்கள் முதல் வெள்ளி வரை (பொது விடுமுறை நாள் தவிர), காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை, எங்களோடு உரையாடுங்கள் அல்லது 1800 356 8300 என்ற எண்ணில் சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையத்தின் உடனடித் தொலைபேசிச் சேவையை அழையுங்கள். மாறாக, நீங்கள் 1800 255 0000 என்ற எண்ணில் காவல்துறையின் உடனடித் தொலைபேசிச் சேவையை அழையுங்கள் அல்லது www.police.gov.sg/iwitness என்ற இணையமுகவரியில் புகாரைச் சமர்ப்பித்திடுங்கள்.